inklink
InkLink Charitable Trust

unicef
for every child





# கோவிட்-19

## சமூக களங்கம் மற்றும் பாகுபாட்டிற்கு எதிராக சிறுவர்களின் குரல்

இது குழந்தைகளின் முதற்கட்ட முயற்சி


ஐய்யோ! அந்த வீட்டில் ஒட்டபட்ட **சுவரொட்டியை** பார்த்தியா? எல்லோரும் அவங்க செய்த **தப்பை** பற்றி தான் பேசுராங்க.
HOUSE NO
என்ன அம்மா??
வெளிநாட்டுல இருந்து வந்திருக்காங்க. அவங்க கூட சேராத. கொரோனா இருக்கும் அவங்களுக்கு.
அவங்க ஆபத்தானவங்க!
அப்பா! அம்மா! நீங்க தப்பா நினைக்குறீங்க. நான் டிவி-லயும் பார்த்தேன், செய்தித்தாள்லையும் படிச்சேன். கொரோனா வைரஸ் இடம், இனம், மொழி பாராமல் யாருக்கு வேணாலும் பரவலாம். **எல்லோரிடமும் அன்புடன் இருப்போம்.** நாமெல்லாம் இதில் ஒன்றாக இருக்கிறோம்.

# பாகுபடுத்துதல் தவறானது




கொரோனா வைரஸ் **எவ்வித மக்களையும்** தாக்கக்கூடியது என்பதை மக்கள் உணர வேண்டும். இனம், தொழில், உணவு மற்றும் வேறு பழக்கங்களின் அடிப்படையில் பாகுபடுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது. "கொரோனா உடையவர்" என்று முத்திரை குத்தப்படுவதற்கு பயந்து பலர் கொரோனா இல்லாத்துபோல் நடிக்க வாய்ப்புள்ளது. இது அனைவருக்கும் ஆபத்தை ஏற்படுத்தும்.

நமது செல்லப் பிராணிகளிடமும் பெருந்தன்மையை காட்ட வேண்டும். அனைத்தும் மனிதநேயம் மற்றும் கருணையை பற்றியதே. தவறான கருத்துகள் மற்றும் தகவல்களை சரிபார்ப்பது நமது கடமை.

## கொரோனாவால் பாகுபாட்டிற்கு ஆளாகுபவர்கள் யார் யார்?



**பல சமூகத்தைச் சேர்ந்தவர்கள்**
மற்றவரை விட அதிக பாகுபாட்டை எதிர்கொள்கிறார்கள்.



**வெளிநாட்டு மக்கள்**




**முன்னனி உதவியாளர்களான**
மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள் போன்றவர்கள்.



மக்கள் அவர்களின் **உணவு பழக்கங்களால்** மதிப்பிடப் படுகிறார்கள்



செல்லப்பிராணிகளும் கோவிட்-ஐ பரப்பலாம் என்ற தவறான எண்ணத்தில் சிலர் அவர்களின் **செல்லப்பிராணிகளை கைவிடுகிறார்கள்**.





உலக சுகாதார அமைப்பு கூறும்படி நாய்கள், பூனைகள் போன்ற பிராணிகள்மூலம் மனிதர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

# ஒருவருக்கொருவர் உதவி நம் ஒற்றுமையை வலுவாக்க வேண்டிய நேரமிது



**தவறான செய்திகள் மற்றும் வதந்திகள் சமூக களங்கத்தையும், பாகுபாட்டையும் ஏற்படுத்துகிறது.**




கோவிட்- 19 இல் இருந்து நலமடைந்தவர்களின் நம்பிக்கைத்தரும் கதைகளைப் பகிருங்கள். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தனிமைபடுத்தப்பட்டவர்களின் பெயர்களையோ, அடையளங்களையோ சமூக வலைதளத்தில் பகிராதீர்கள்.

தவறான தகவல்களைப் பகிர்வதைத் தவிர்க்கவும்.


WELCOM
கதவுகளில் ஒட்டபடுள்ள தாள் அங்கு உள்ளவர்களுக்கு வைரஸ் இருப்பதாக உறுதிபடுத்தாது. அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் வெளிநாடு அல்லது வெளியூர், சென்றுவந்ததால் தனிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று மட்டுமே குறிக்கும். அவர்களுக்கு நோய்த்தொற்று இல்லாமலும் இருக்கலாம். மற்றும் இந்த தனிமைப்படுத்துதல் சில காலத்துக்கு மட்டுமே.
AMBULANCE
ஆஹா! **குணமடைந்து வருகிறார்களே!** இவர்களை ஊக்குவிக்க வேண்டும்! கைத்தட்டல்கள்!
சிகிச்சை பெறுபவர்களை கோவிட்-19 நோயாளிகள் என்று அழைப்பதை தவிர்த்து, கோவிட்-19 இல் இருந்து குணமடைபவர்கள் என்று அழையுங்கள்.

## இந்த இக்கட்டான சூழலில் கடுமையாக உழைக்கும் மக்களை அன்புடனும், மதிப்புடனும் நடத்துவோம்.






நம் பாதுகாப்பிற்காக தங்களை ஆபத்துக்கு உள்ளாக்குபவர்களுக்கு நாம் **நன்றி** தெரிவிக்க வேண்டும்.

அவர்கள் நமக்கு உதவவே பணிபுரிகிறார்கள். அத்தியாவசிய சேவைகளைச் செய்பவர்களின் முயற்சிகளை **பாராட்டி** அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் ஆதரவு அளிப்போம்.

கோவிட்-19ஐ காரணம்காட்டி பிற மதத்தினரிடமோ, பிற நாட்டினரிடமோ நாம் பேதம் காட்டக்கூடாது. ஜாதி, மதம், இனம், மொழிக்கு அப்பாற்பட்டு இந்த வைரஸ் தொற்று யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படலாம்.





**வேற்றுமையில் ஒற்றுமையே நமது பலம்.**



இது ஒரு சர்வதேச பரவல். நாம் **ஒருங்கிணைந்து**, வரும் காலம் நன்றாக அமைய போராடுவோம்.



# குழந்தைகளின் முயற்சியைப் பற்றி

இங்க் லிங்க் அறக்கட்டளை, UNICEF தமிழ் நாடு மற்றும் கேரள அமைச்சகத்துடன் சேர்ந்து குழந்தைகள் சார்ந்த இந்த கையேட்டையை உருவாக்கியது. இது குழந்தைகளுக்கு அச்சம், பதட்டத்தை நீக்கி, கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வாறு சமூக களங்கம் மற்றும் பாகுபாட்டிற்கு உள்ளாகிறார்கள் என்று உணர்த்த கார்டூனாக வரையப்பட்டுள்ளது.

இதில் உள்ள சித்திரங்கள் மற்றும் படைப்புகள் இங்க் லிங்க்- இன் வழிகாட்டலின் கீழ் குழந்தைகளால் அவரவர் வீட்டிலிருந்தே உருவாக்கப்பட்டு, இங்க் லிங்க்-இன் இளம் படைப்பாற்றல் குழுவால் ஆன்லைனின் மூலமே தேர்வாக்கப்பட்டது.

